# திருநாங்கூர் 11 திவ்ய தேச வரலாறு

பாத்ம புராணத்தில் அகஸ்தியர், உபரிசரவசுமன்னனுக்கு பாரத தேசத்தில் உள்ள ஷேத்ர தீர்த்த மஹிமைகளை கூறிவரும் பகுதியில் பலாசவன மஹாத்மியம் பதினேழு அத்தியாம் கொண்டதாக அமைந்துள்ளது.

பலாசவனம்:-

காவேரியின் வடபாகத்திலும், மண்ணியாற்றின் தென்பகுதியிலும் சுவேதாரண்யம் என்னும் திருவெண்காட்டிற்கு மேற்கிலும், காழிச்சீரா விண்ணகரத்திற்கு (சீர்காழி) கிழக்கிலும் ''பலாசவனம்'' என்னும் க்ஷேத்திரம் உள்ளது. பலாசவனம் வாழை, மா, பலா முதலான பழம் தரும் மரங்களாலும் அசோகு முதலான நிழல் தரும் மரங்களாலும் சண்பகம் முதலான மரம், செடி, கொடிகளாலும் நிறைந்தது .

நாங்கூரின் சிறப்பு:-

தேவர்கள், சித்தர்கள், முனிவர்கள் வாசம் புரிவதால் அளவற்ற மகிமை உடையது. புனிதமான அவ்வனத்தின் நடுவில் '' நாகபுரம்'' என்னும் சிறந்த ஒப்பற்ற நகரமாக நாங்கூர் உள்ளது. நாங்கூர் சீர்காழியிலிருந்து 10 கீ .மீ தொலைவில் உள்ளது. மிகப்பெரிய கிராமம் ஆகும். இங்குள்ள மக்கள் தொகையில் பெரும்பாலானோர் விவசாயத்தையே சார்ந்துள்ளனர். இங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் திருமங்கையாழ்வார் பாசுரப்படி நான்கு வேதங்களையும் ஐந்து யாகங்களையும், ஆறு வேதாங்கங்களையும் நன்கு கற்றவர்கள். ஸ்ரீ மஹாவிஷ்ணுவையே எல்லாமாக கொண்டு வாழ்பவர்கள். ''நாங்கை நாலாயிரவர், தில்லை மூவாயிரவர் என்ற பழமொழியின்படி 4000 ஸ்ரீவைஷ்ணவர்கள் வாழ்ந்த ஊர் நாங்கூர். இப்போதும் அதைக்குறிக்க இங்கு நாலாயிரத்தொருவர் என்ற தும்பிக்கையாழ்வார் (பிள்ளையார்) கோயில் உள்ளது. '' காஞ்சிபுரம்'' பல்லவர்களின் கோவில் நகரமாக விளங்குவதைப் போல சோழர்களின் கோவில் நகரமாக நாங்கூர் விளங்குகிறது. நாங்கூரில் 11 வைஷ்ணவ திருக்கோயில்களும், 11 சிவன் கோவில்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இங்குள்ள எம்பெருமான்களை ஸ்ரீ திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார். ஸ்ரீ திருமங்கை ஆழ்வார் நாங்கூருக்கு அருகில் உள்ள திருவாலியில் குறு நில மன்னராக ஆட்சி புரிந்து வந்தார்.

ஒரு சமயம் பூலோகத்தில் தாட்சாயினி (பார்வதி) சிவபெருமானை தன் தந்தை தட்சனின் அனுமதியின்றி மணந்து கொண்டாள். அதனால் சிவபெருமானுக்கும், தட்சனுக்கும் பகைமை ஏற்பட்டது. ஒருமுறை தனது தந்தையான தட்சன் ஒரு பெரும்யாகம் ஒன்றை செய்தான். அந்த யாகத்தில் சிவனை அழைக்கவில்லை. தன் தந்தைக்கு

புத்திமதி கூறி தங்களை ( சிவன்) யாகத்திற்கு அழைக்கச் செய்கிறேன் என்று கூறி யாகம் நடக்கும் இடத்திற்கு சென்றாள். தனது தந்தைக்கு பல புத்திமதிகளை கூறி சிவபெருமானை யாகத்திற்கு அழைக்கும் படி வேண்டினாள். தட்சன் சினந்து சிவனையும், தாட்சாயினியையும் இகழ்ந்து பேசினான்.

இதனால் கோபமுற்ற தாட்சாயினி யாக சாலையை அழித்து சிவனிடம் திரும்பி வர, சிவபெருமான் பார்வதியை ஏற்க மறுத்து கோபம் தாங்கமல் ருத்ர தாண்டவமாடினார். உபய காவேரியின் கரையில். அப்போது சிவனின் ஜடாமுடி பூமியில் ஒவ்வொரு முறையும் பட்டவுடன் அதிலிருந்து ஒரு சிவன் தோன்ற அவர்களும் ருத்ர தாண்டமாடினார்கள். இப்படியே ஒவ்வொரு சிவன் உருவாக, இதனால் கலக்கமுற்ற பிரம்மாதி தேவர்கள் உலகை காக்கும்படி மஹாவிஷ்ணுவிடம் முறையிட்டனர்.

பரமபதத்தில் இருந்த மஹாவிஷ்ணுவும் இந்த உபய காவேரியில் ஸ்ரீதேவி பூதேவிகளுடன் எழுந்தருளி சிவபெருமானுக்கு காட்சியளித்தான். சிவபெருமானும் ருத்ர தாண்டவத்தை நிறுத்தினான். சிவபெருமான் மஹாவிஷ்ணுவிடம் தாங்களும் எங்களுக்கு 11 திருமால்களாக காட்சி அளிக்க வேண்டும் என சிவன் வேண்ட பூலோகத்தில் முக்கிய அர்ச்சாவதார மூர்த்திகளாக உள்ள 10 எம்பெருமான்களை நினைத்த மாத்திரத்தில் 10 எம்பெருமாள்களும் இங்கே எழுந்தருளினர். இவர்கள் உபயகாவேரியின் மத்தியில் கோவில் கொண்டுள்ளனர். அவர்கள்

1. திரு மணிமாடக்கோவில் – நாராயணபெருமாள் – பத்ரி
2. திரு அரிமேய விண்ணகரம் – குடமாடு கூத்தர் – கோவர்த்தனகிரி
3. திரு செம்பொன் செய்கோயில் – அழகிய மணவாளன்– உறையூர்
4. திருத்தெற்றியம்பலம் – ரங்கநாதர் ஸ்ரீரங்கம்
5. திருவெள்ளகுளம் – அண்ணன்பெருமாள் – திருப்பதி
6. திரு வண்புருடோத்தமம் – வண்புருஷோத்தப்பெருமாள் –அயோத்தி இராமன்
7. திருமணிக்கூடம் – வரதராஜர் – காஞ்சிபுரம்
8. திரு வைகுந்தவிண்ணகரம் – வைகுந்தநாதர் – பரமபதம்
9. திருத்தேவனார் தொகை – திருவிடந்தை
10. திருபார்த்தன்பள்ளி – பார்த்தசாரதி – குருக்ஷேத்திரம்
11. திருக்காவளம்பாடி –கண்ணன்– துவாரகை

## 1. திரு அரிமேய விண்ணகரம் – குடமாடு கூத்தர்.

| | | |
|---|---|---|
| மூலவர் | – | ஸ்ரீ குடமாடு கூத்தர் |
| உத்ஸவர் | – | சதுர்புஜ கோபாலன் |
| தாயார் | – | அமிர்தகடவல்லி தாயார் |
| விமாநம் | – | உச்சசிருங்க விமாநம் |
| தீர்த்தம் | – | அமிர்த புஷ்கரிணி |
| காட்சி கண்டவர்கள் | – | உதங்கர், ஏகாதச ருத்ரர்கள் |
| மங்களாசாஸனம் | – | ஸ்ரீ திருமங்கையாழ்வார் |

ஒரு சமயம் சகல கலைகளையும் அறிந்தவரான காஸ்யப முனிவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு கத்ரு, விநதை, என இரண்டு மனைவிகள். விநதை முதலாமவள் மற்றவள் கத்ரு. விநதையின் மகன்தான் கருடன், அருணன். கத்ருவுக்கு பிறந்தவைகள் எல்லாம் கிருஷ்ணசர்பங்கள் என்று சொல்லக்கூடிய விஷப்பாம்புகள் (கார்கோடகன், தக்ஷகன்) விநதையும்,கத்ருவும் அடிக்கடி சண்டையிடுவார். ஒரு நாள் தங்கள் குழந்தைகளுடன் கடற்கரைக்கு சென்றிருந்தனர். அந்த சமயம் இந்திரன் தேவலோக குதிரையான உச்சிரவஸீல் வான் வழியில் சென்றான். அதனைக்கண்ட விநதை ஆஹா பால்போன்று உடல் முழுக்க வெண்மையான இருக்கிறது என்றாள். உடனே அந்த குதிரையின் வால் மட்டும் கருப்பாக இருக்கிறது என்றாள் கத்ரு. இவ்வாறு வாதாடியபோது குதிரை போய்விட்டது. விநதை கத்ருவிடம் நீ கூறியது போல் வால் கருப்பாக இருந்தா நானும் எனது மகன் கருடனும் உனக்கு அடிமை என்றாள். அதுபோல நான் கூறியது போல வெள்ளையாக இருந்தால் நீயும் (கத்ரு) உனது மகன்களும் எனக்கு அடிமை என்றாள் கத்ருவும் அதற்கு சம்மதித்தாள். குதிரையின் வால் வெள்ளை என்று கத்ருவுக்கு நன்கு தெரியும் இருப்பினும் விநதையை அடிமைபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தனது மகன் கார்கோடகனிடம் நீ போய் உச்சிரவஸ் குதிரையின் வாலில் சுற்றிகொள் உன் மூச்சு காற்று பட்டாளே வால் கருப்பாகிவிடும். அதன் பின் விரதையும் கருடனும் நமக்கு அடிமை என்றாள். கார்கோடகனும் பறந்து சென்று குதிரையின் வாலை பற்றிக்கொண்டு வாலை கறுப்பாகிவிட்டான். மறுநாள் வெள்ளைக்குதிரையும் மீண்டும் வானில் பறந்த போது இருவரும் அதன் வாலை நோக்கினார்கள். குதிரையின் வால் கருப்பாக தெரிந்தது அந்த வினாடி முதல் விநதையும் கருடனும் கத்ருவுக்கு அடிமையானாள். அவர்கள் இருவரையும் கத்ரு கொடுமைபடுத்தினாள். கருடன் தன் தாயிடம் விமோசனம் கேட்டான். விரதையும் கத்ருவிடம் கெஞ்சினாள். கத்ரு தேவலோகத்தில் உள்ள அமிர்தகலசத்தை உன் மகன் கருடன் கொண்டு வந்தால்

அவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதாகக் கூறினாள். அதன்படி கருடனும் தேவலோகம் சென்று அமிர்தகலசத்தை இந்திரனிடமிருந்து பெற்று கத்ருவிடம் கொடுத்தான். கத்ருவும் அவர்களை அடிமைத்தனத்திலிருந்து நீக்கினாள் பிறகு அந்த அமிர்தகுடத்தை தர்பைபுல் மீது வைத்துவிட்டு நீராடச் சென்றாள். அப்போது அசுரன் ஒருவன் அந்த அமிர்தகுடத்தை எடுத்து ஓடினான். கருடனும் பெருமாளை வேண்ட விஷ்ணுவும் ஓர் அம்பால் அசுரனின் கையை துண்டித்தார். அந்த அமிர்தகுடம் பலாசவனத்தில் பகவானின் காலடியில் விழுந்தது. அந்த இடம்தான் "அமிர்தபுஷ்கரணி " என்று அழைக்கப்படுகிறது. அந்த அமிர்தகுடத்தில் உள்ள அமிர்தத்தை தேவர்களுக்கு வழங்கி அந்த குடத்தின் மேல் நின்று ஆனந்தகூத்தாடினார். அதனால் பகவான் "குடமாடு கூத்தர்" என அழைக்கப்பட்டார். நீராடிவிட்டு திரும்பிய கத்ரு அமிர்த குடத்தை காணாது தர்பை புல் மட்டுமே இருப்பதைக் கண்டு அதிர்ந்தாள். பின் ஒருவாரு தன்னை தேற்றி கொண்டு தர்பை புல் மீது உள்ள அமிர்த துளிகளை கத்ருவும் குழந்தைகளும் நாக்கினால் நக்கினார்கள். அதனால் கூர்மையான தர்பைப்புல் அவர்களது நாக்கை இரண்டாக பிளவுப்படச் செய்தது. ஆகவே இன்றைக்கும் பாம்பின் நுனி நாக்கு இரண்டாகப் பிளந்து உள்ளதைக் காணலாம்.

**சிறப்புகள்:**

1. இந்த எம்பெருமானும் தை அமாவாசை அன்று நடக்கும் 11 கருடசேவையில் எழுந்தருனி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.
2. திருமங்கை ஆழ்வார் மங்களசாஸனம் செய்த 10 பாடல்களில் 8 பாசுரங்களில் எம்பெருமான் தேவர்களுக்காக அமிர்தம் கடைந்து அசுரர்களை வென்றதனையும், மாவலியை அடக்கியதையும் கூறி பகைவர்களை வெல்ல அருள்பாலிப்பவர் இவரே என்று தலைக்கட்டுகிறார்.
3. வைகாசி விசாகம் சேர 10 நாள் உத்ஸவம் நடக்கிறது.
4. ஆண்டாளுக்கு தனி சன்னதி உள்ளது.
5. இங்குள்ள பெருமானை வேண்டிக்கொண்டால் எல்லா வியாதிகளும் தீர்ந்து நீண்ட ஆயுளுடன் இருப்பர் என்பதே ஐதீகம்.

## 2. திருத்தெற்றியம்பலம் - பள்ளிகொண்ட ரங்கநாத பெருமாள்

| | | | |
|---|---|---|---|
| 1 | மூலவர் | – | செங்கண்மால், லக்ஷ்மிரங்கன் |
| 2 | உத்ஸவர் | – | |

| | | | |
|---|---|---|---|
| 3 | தாயார் | – | செங்கமலவல்லி |
| 4 | விமாநம் | – | வேத விமாநம் |
| 5 | தீர்த்தம் | – | சூரிய புஷ்கரிணி |
| 6 | காட்சி கண்டவர்கள் | – | கருடன், ஏகாதச ருத்ரர்கள் |
| 7 | மங்களாசாஸனம் | – | ஸ்ரீ திருமங்கையாழ்வார் |

**பெயர்காரணம்:**

திரு என்ற சொல்லுக்கு மஹாலஷ்மி என்று பொருள்படும். தெற்று – மேடான (அ) மேலான, அம்பலம் – கோவில் மஹாலஷ்மி வாசம் செய்யும் மேலான கோவில் ஆகும். இங்கு ஸ்ரீரங்கம் ரங்கநாதரே வந்துள்ளதாக ஐதீகம்.

**தலவரலாறு:**

முன்பு மஹாவிஷ்ணு ஹரண்ய கசிபுவை அழிக்க காலகேயபுரம் செல்ல நினைத்த போது ஸ்ரீ மஹாலக்ஷ்மியும், கருடனும் நாங்கள் ஒரு போதும் தங்களை விட்டு பிரியமாட்டோம் என்றனர். மஹாவிஷ்ணுவும் நான் நரசிம்ம அவதாரம் எடுத்து விரைவில் அசுரனை அழித்து உங்களுடன் வந்து சேர்வேன் அதுவரை பூலோகத்தில் என்னை நினைத்து தியானித்து இருங்கள் என்றார். அதன்படியே மஹாலக்ஷ்மி, கருடன் நாங்கூருக்கு வந்து தவமியற்றினார்கள். எம்பெருமானும் அவர்களுக்கு காட்சியளித்து அவர்களின் வேண்டுகோளின்படி இங்கேயே தங்கி அருள்பாலித்து வருகிறார்.

சிறப்புகள்:

1. நான்கு புஜங்களுடன் ஆதிசேஷன் மீது சயன திருக்கோலத்தில் இருக்கும் இப்பெருமாள் பார்ப்பதற்கு மிகவும் பேரழகு வாய்ந்தவர்.
2. இப்பெருமானைச் சேவிப்பவர்கள் அரசாளும் வல்லமை பெறுவர் என்றும், அரசபதவி சம்மந்தமான வேண்டுதல்கள் நிறைவேறும் என்பதும் ஐதீகம்.
3. மூலவர் சுதையினால் ஆனதால் தைலகாப்பு உத்ஸவம் நடைபெறுகிறது.
4. புரட்டாசி உத்திரட்டாதி சேர 10 நாட்கள் உத்ஸவம் நடைபெறுகிறது.

### 3 – திருவண்புருடோத்தம் ஸ்ரீவண் புருஷோத்தமன்

| | | |
|---|---|---|
| மூலவர் | – | ஸ்ரீவண்புருஷோத்தமன் |
| உத்ஸ்வர் | – | அதே பெயர் |
| தாயார் (மூலவர்) | – | ஸ்ரீ புருஷோத்தமநாயகி |

| | | |
|---|---|---|
| உத்ஸவர் | – | அதே பெயர் |
| விமாநம் | – | சஞ்விக்ரஹ விமாநம் |
| தீர்த்தம் | – | திருப்பாற்கடல் |
| காட்சிகண்டவர்கள் | – | உதங்கர், உபமன்யு, ஏகாதச ருத்ரர்கள் |

**பெயர்க்காரணம் :–**

உத்தமன் என்னும் சொல்லுக்கு பெரியவாச்சான்பிள்ளை என்ற ஆச்சார்யரின் வியாக்யானம் யாதெனில் புருஷர்கள் மூவகை.

1. அதமன்:- தான் இன்பமுற அடுத்தவன் துன்புற்றலும் கவலையில்லை என்று எண்ணுபவன்.
2. மத்திமன் :– தான் இன்புறுதல் போல் மற்றவரும் இன்மமுற வேண்டும் என்று எண்ணுபவன்.
3. உத்தமன் :- தான் துன்பமுற்றாலும் பரவாயில்லை மற்றவர் இன்பமுறை வேண்டுமென எண்ணுபவன் எம்பெருமானின் அவதாரங்களும் அவ்விதமாக உள்ளது. தான் துன்பமுற்றாலும், பரவாயில்லை உலகம் இன்பமுற வேண்டுமென்று அவதாரமெடுத்தால் உத்தமன் ஆனான். குறைவில்லாத ரட்சிப்புத் தன்மை கொண்டு வள்ளல்போல் தன் அருளை வழுங்குதலால் **வண்புருஷோத்தமனான்**

**1. தலவரலாறு:**

முன்பு உதங்க மகரிஷி இங்கு தவமிருந்ததாக பகவத்கீதையின் 15 வது அத்தியாயமான புருஷோத்தமாயோகா, புருஷஸீக்தமூலம் தெரியவருகிறது. உதங்கரின் கடும் தவம் தேவர்களை சுட்டெரித்தது. தேவர்கள் ஸ்ரீமந்நாராயணனை சரணடைந்து தங்களை காக்கும்படி வேண்டினர். அவ்வாறே ஸ்ரீமந்நாராயணனும் உதங்கருக்கு சேவை சாதித்து அவரை முக்தியடைய செய்தான். உதங்கரின் வேண்டுகோளின்படி ஸ்ரீதேவி, பூதேவியுடன் பெருமாள் இங்கேயே சேவை சாதித்து வருகிறார்.

2. வியாக்ரபாதர் ஒருமுறை மற்ற திவ்ய தேசங்களை தரிசிப்பதற்காக தன் 3 வயது குழந்தை உபமன்யுவுடன் இவ்விடத்திற்கு வந்தார். ஸ்ரீவன் புருஷோத்தமனின் வடிவழகில் ஈடுபட்டு இங்கேயே தங்கி பெருமாளுக்கு புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார். ஒரு நாள் தனது குழந்தையை சன்னதியில் விட்டுவிட்டு புஷ்பம் பறிக்க நந்தவனம் சென்றார். தன்னை மறந்த நிலையில் வெகுதூரம் சென்றுவிட்டார். அப்போது உபமன்யு பசியால் அழுதது. வண்புருஷோத்தமன் திருபாற் திருப்பாற்கடலை (க்ஷீராப்தி) வரவழைத்து பாற்கடல் பாலை உபமன்யுவுக்கு ஊட்டினான். குழந்தையும் பசி நீங்கி

ஞானபக்தி பொலிய விளங்கிற்று. உபமன்யு பிராத்தித்தபடி பெருமாள் திருப்பாற்கடலை பெரிய ஏரியாக மாற்றினார். அஃது தற்சமயம் ‘‘திருப்பாற்கடல்’’ என அழைக்கப்படுகிறது. வியாக்ரபாதர் உபமன்யுவிடம் உதங்கர் புருஷோத்தமவித்தையை ஆதாரமாக கொண்டு தவமிருந்து ஸித்திபெற்றார். நீயும் அதுபோல் ஸித்திபெருவாயாக என்றார். வ்யாக்ரம் – புலி, பாதம் – கால் = புலிக்கால் முனிவர் .

**சிறப்பு அம்சம்:**

1. திருவரங்கம், திருமலை, திருமாலிருஞ்சோலை, துவாரகை திருக்குடந்தை ஆகிய திவ்ய தேசங்களுக்கு ஒப்பானது..
2. இங்குள்ள உத்ஸவர் மிகவும் அழகானவர்.
3. ஸ்ரீராமானுஜர், ஸ்ரீ மணவாளமாமுனிகள், பிரதிவாதி பயங்கரம் அண்ணா ஆகியோர் மங்களாசாஸனம் செய்துள்ளனர்.
4. திருமணமாகாத பெண்கள், சந்தானபிராப்தி இல்லாதவர்கள் இங்கு வேண்டினால் அவர்களது எண்ணம் நிறைவேறும் என்பது ஐதீகம்.
5. தீராத வழக்குள் தீர இங்கு வந்து 48 நாள் சிறப்பு பூஜை செய்தால் நல்லபலன் ஏற்படும் என்பது ஐதீகம்.
6. அயோத்திய ராமனே இங்கு எழுந்தருளியுள்ளார்.

    ‘‘ திருமங்கை ஆழ்வாரைபோல பெரியாழ்வாரும்
    வடதிசை மதுரை சாளக்கிராமம்.
    வைகுந்தம் துவரை அயோத்தி
    இடமுடை வதரியிடவகையுடைய
    எம் புருடோத்தமனிருக்கை என்றார்.

7. பங்குனி திருவோண நட்சத்திரத்தில் 10 நாள் சேர பிரம்மோத்ஸவம் பவித்ரோத்ஸவம் (ஐப்பசி), மணவாளமாமுனிகள் வருஷ உத்ஸவம் ( ஐப்பசி மூலம்) நடைபெறுகிறது.

### 4. திருமணிக்கூடம் – வரதராஜபெருமாள்

| | | |
|---|---|---|
| மூலவர் | - | கஜேந்திர வரதன், மணிக்கூடநாயகன் |
| உத்ஸவர் | – | வரதராஜன் |
| தாயார் | - | திருமாமகள் நாச்சியார் |
| தீர்த்தம் | - | சந்திர புஷ்கரணி |
| விமாநம் | – | கனகவிமாநம் |
| காட்சிகண்டவர்கள் | – | பெரிய திருவடி, சந்திரன், ஏகாதச ருத்திரர்கள் |

**தல வரலாறு:-**

தட்சன் தன் மகள்களை, அஸ்வினி, முதலான 27 நட்சத்திரங்களுக்கு சம்மாக நடத்துவதாக சந்திரன், திருமணம் செய்து கொண்டான். ஆனால் ரோகிணியை மட்டும் விரும்பினான். மற்றவர்களை உதாசீனப்படுத்தினான். மற்ற பெண்கள் தட்சனிடம் முறையிட்டனர். தட்சன் தீராத நோயால் அவதிபடுவாய் என சந்திரனுக்கு சாபம் கொடுத்தான். சாப விமோசனைம் வேண்டி இந்தளூர், தலைச்சங்கன் நாண்மதியம் ஆகிய திவ்ய தேசங்களில் தவமிற்றினான். எம்பெருமான் அவனுக்கு திருமணிக்கூடத்தில் சாபவிமோசனம் அளிப்பதாக கூறினார். சந்திரனும் திருமணிக்கூடத்தில் உள்ள புஷ்கரணியில் நீராடிய போது அவனது நோய் தீர்ந்தது. அதனால் அந்த புஷ்பகரணிக்கு ''சந்திரபுஷ்பகரணி'' என்று பெயர் ஏற்ப்பட்டது.

**சிறப்புகள்:**

1. முன்பு கூறியபடி 11 எம்பெருமான்களில் இவர் காஞ்சிவரதராஜர் ஆவார்.
2. தீராத வியாதிகள் இருந்தால் பூச நட்சத்திரத்தில் அர்ச்சனை செய்து வழிப்பட்டால் நீங்கும் என்பது ஐதீகம்.
3. சந்திரனால் ஏற்ப்படக்கூடிய கஷ்டங்கள் தீர இங்கு வந்து பெருமாளிடம் பிராத்தனை செய்யலாம்.
4. பிரதி வருடம் ஆனி மாதம் பூச நட்சத்திரத்தில் 10 நாட்கள் உத்ஸவம் நடைபெறுகிறது.
5. தை அமாவாசை, 11 கருடசேவை உத்ஸவத்திற்கு இந்த எம்பெருமானும் எழுந்தருளுகிறார்.

## 5. திருவைகுந்த – விண்ணகரம் வைகுந்த நாத பெருமாள்

| | | |
|---|---|---|
| மூலவர் | – | பரமபதநாதன் |
| உத்ஸவர் | – | வைகுந்த நாதர் |
| தாயார் | – | வைகுந்தவல்லி |
| விமானம் | – | அனந்த ஸத்ய வர்த்தக விமானம் |
| தீர்த்தம் | – | விரஜா தீர்த்தம் |
| காட்சி கொடுத்தவர்கள் | – | ஸ்வேத கேது, ஏகாதச ருத்ரர்கள் |

ஸ்வேத கேது என்ற இஷ்வாகுலத்தரசன் ( ஸ்ரீ ராமர் பிறந்த குலம்) தன் தருமபத்தினியான தமயந்தியுடன் அக்னியின் நடுவில் தவமேற்றி வைகுந்த லோகம் போக தவமேற்றினார்கள். அதன் பயனாய் அவ்விருவரும் வைகுந்த லோகத்திற்கு

சென்றனர். ஆனால் அங்கு ஸ்ரீ வைகுந்த நாதனை காணமுடியவில்லை. மேலும் அங்கிருந்த நாட்களில் பசியும் தாகமும் ஏற்ப்பட்டது. வைகுந்த நாதரை சேவிக்க முடியாமல் திரும்பி வரும் போது நாதரிடம் தன் துன்பத்தை பற்றி கூறினான். நாதரும் அரசனே நீ பூவுலகில் தான தர்மங்கள் எதுவும் செய்யாமல் தவம் ஒன்றே பெரியதாக கருதினாய். அதனால் ஸ்ரீய பகுதியான வைகுந்தநாதன் தங்கள் கண்களுக்கு புலப்படவில்லை. எனவே மீண்டும் பூலோகம் சென்று பலாசவனத்தில் ஸ்ரீ வைகுந்தநாதனை நினைவில் நிறுத்தி தவமியற்ற சொன்னார். அரசனும் அவ்விதமே பற்பல தான தர்மங்களை செய்து தனது பத்தினியுடன் மீண்டும் தவமியற்றினான். அவனது தவத்தை மெச்சி எம்பெருமான் ஸ்ரீ வைகுந்த நாதனாக ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவிகளோடு சேவை சாதித்தான். அரசனது வேண்டுகோளின்படி இங்கேயே தங்கி பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறான் வைகுந்தத்தில் இருக்கும் விரஜா நதி இங்கு வந்துள்ளதாக ஐதீகம்.

**சிறப்புகள்:**

1. பரமபதத்திற்கு ஒப்பான திவ்ய தேசம்
2. ஆடிமகம் சேர, 10 நாட்கள் உத்ஸவம் நடைபெறுகிறது.
3. கல்யாணமாகாத கன்னிப்பெண்கள் 5 மக நட்சத்திரத்தில் அர்சித்து பாயசம் நிவேதனம் செய்தால். விவாக ப்ராப்தி உண்டாகும் என்பது ஐதீகம்.
4. வைகுந்தத்தில் உள்ள விரஜாநதி இங்குள்ளதால் அதில் நீராடினால் வைகுந்த பிராப்தி சித்திக்கும் என்பது ஐதீகம்.

## 6.திருத்தேவனார் தொகை – மாதவப்பெருமாள்

| | | |
|---|---|---|
| மூலவர் | – | தெய்வநாயகன் |
| உத்ஸவர் | – | மாதவப்பெருமாள் |
| தாயார் மூலவர் | – | கடல் மகள் நாச்சியார் |
| தாயார் உத்ஸவர் | – | மாதவநாயகி |
| விமாநம் | – | சோபனவிமாநம் |
| தீர்த்தம் | – | சோபன புஷ்கரணி |
| காட்சிகண்டவர்கள் | – | வசிஷ்டர் |

**தலவரலாறு:**

முன்பு தேவர்கள் பாற்கடலை கடைந்த போது முதலில் ஆலகால விஷம் தோன்றியது. அதை சிவபெருமான் பருகினார். அதன் பின்பு ஐராவதம் என்ற யானை,

கற்பகவிருட்சம் முதலியவைகளை இந்திரன் எடுத்துக்கொண்டான். அதன்பின்பு மகாலெட்சுமி தோன்றினாள். மகாவிஷ்ணு மகாலெட்சுமியை திருமணம் செய்து கொண்டார். அதை தேவர்கள் கண்டனர். ஆனால் வசிஷ்ட முனிவரால் அந்த கல்யாண கோலத்தை காணமுடியவில்லை அந்த சமயம் வசிஷ்டர் பாதள லோகத்திற்கு யாகம் செய்வதற்காக சென்றார். அதனால் வருத்தம்முற்ற வசிஷ்டர் மகாவிஷ்ணுவை குறித்து தவமேற்றினார். மகாவிஷ்ணு வசிஷ்டருக்கு காட்சி கொடுத்து பூலோகத்தில் தவமேற்றினால் கல்யாண திருக்கோலத்தில் காட்சி கொடுப்பதாக சொன்னார். வசிஷ்டரும் இத்திவ்யதேசத்தில் கடும் தவமேற்றினார். மகாவிஷ்ணு அவரது பக்திக்கு மெச்சி ஸ்ரீதேவி, பூதேவி சகிதமாக காட்சியளித்தார். அந்த ரிஷியின் வேண்டுகோளின்படி இன்றும் கல்யாணகோலத்தில் பக்தர்களுக்கு காட்சியளிக்கிறார்.

**சிறப்புகள்:**

1. சிவபெருமானின் ருத்ர தாண்டவத்தை நிறுத்த வந்த 11 எம்பெருமான்களில் இவர் திருவிடவிந்தை எம்பெருமான்.
2. உத்ஸவ மூர்த்தியின் பெயராலேயே மாதவப்பெருமான் கோயில் என அழைக்கப்படுகிறது.
3. மூலவருக்குண்டான “தெய்வநாயகன்” என்னும் திருநாமம் திருவஹிந்திரபுரத்திற்கும் , வானமாமலைக்கும் உண்டு.
4. திருமணமாகாத கன்னிப்பெண்கள் திருவோண நட்சத்திரத்தில் இங்கு சிறப்பு பூஜைகள் செய்தால் விவாகம் கைக்கூடும் என்பது ஐதீகம்.
5. சித்திரை மாதம் திருவோணம் சேர 10 நாட்கள் உத்ஸவம் நடைபெறுகிறது.

## 7 . திருக்காவளம்பாடி கோபாலஸ்வாமி

| | | |
|---|---|---|
| மூலவர் | : | கோபாலஸ்வாமி |
| தாயார் | : | மடவால்மங்கை |
| உத்ஸவம் | : | ராஜகோபாலன் |
| விமாநம் | : | ஸ்வயம்பு |
| தீர்த்தம் | : | தடமலர்பொய்கை |
| காட்சிகண்டவர்கள் | : | ருத்ரன்,சேனைத்தலைவர் |

**தலவரலாறு:**

ஒரு முறை சத்தியபாமா கண்ணனிடம் தேவலோகத்து பாரிஜாதம் கேட்டாள். கண்ணனும் இந்திரனிடமிருந்து பெற்றுத்தருமவதாகவும் சிலகாலம் பொறுத்திருக்கும்படி

சொன்னார். நரகாசுரன் தேவர்களை இம்சித்தான். தேவர்கள் இந்திரனுடன் சென்று கண்ணபிரானிடம் நரகாசுரனை அழிக்கும்படி வேண்டினார். கண்ணனும் சத்தியபாமாவின் துணையோடு நரகாசுரனுடன் போர் புரிந்து அவனை அழித்தான் . இந்திரன் கண்ணனை ஒரு நாள் தேவலோகத்தில் அரசராக இருக்கும்படி கேட்டுக்கொண்டான். இந்திரன் கேட்டுகொண்டதற்கு இணங்க ஒரு நாள் தேவலோகத்தில் கண்ணன் இருத்தார். அப்போது தேவேந்திரனிடம் பாரிஜாதகத்தை கொடுக்கும்படி கண்ணன் கேட்டான். இந்திரன் மறுக்கவே அவனது பூஞ்சோலையை அழித்து அந்த பாரிஜாதகத்தை நடுவதற்கு சிறந்த இடம் எது என்று தேடிக் கொண்டிருந்த போது இந்த திவ்யதேசமே பொருத்தமான என்று இங்கு எழுந்தருளி பக்தர்களுக்கு இன்றும் சேவை சாதித்து வருகிறான்.

**சிறப்புகள்:**

1.துவாரகைபுரியிலிருந்து கண்ணன் ருக்மனி,சத்யபாமாவுடன் இங்கு வந்ததால் இத்திவ்யதேசம் துவாரகைக்குசமமானது.

2.திருநாங்கூரில் அமாவாசைக்கு மறு நாள் நடைபெறும் கருடசேவைக்கு இவரும் எழுந்தருளுகிறார்.

3. பங்குனி மாதம் தோகினி நட்சத்திரன்று 10 நாள் பிரம்மோத்ஸவம் நடைபெறுகிறது.

4. திருமணமாகாத பெண்கள் ரோகினி நட்சத்திரத்தில் தொடர்ந்து 6 வாரம் அர்ச்சனை செய்தால் விவாஹம் கூடும் என்று நம்பப்படுகிறது.

5. சந்தான பிராப்தி இல்லாத தம்பதியினர் ரோகினி நட்சத்திரத்திரன்று பெருமாளுக்கு திருமஞ்சனம், தளிகை அமுது செய்து பிராத்தித்தால் சந்தான பிராப்தி உண்டாகும் கூடும் என்று நம்பப்படுகிறது.

6. தீராத நோய்கள், தோஷங்களுக்காக இப்பெருமானை வேண்டிக் கொண்டால் அவர்களது குறை நீங்குவதாக ஐதீகம்.

**இதில் குறிப்பிடப்பட்டுள்ள தல வரலாறுகள் திருநாங்கூர் வித்யாபூஷணம் ப்ர.ப.அண்ணங்கராசார்யர் ஸ்வாமி வைகுந்த விண்ணகரம் திருமாளிகை, அவர்கள் எழுதியுள்ள நூல்களை ஆதாரமாக் கொண்டும் பிற நூல் தொகுப்பிலிருந்தும் எடுத்து தொகுத்து வழங்கியவர் ப்ர.ப அ. புருஷோத்தமன்.**